**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE, TIRUVANNAMALAI.**

**O.S. No. 110 /2022 PW1**

19.09.2024 **வ.சா.1 திரு. கண்ணன் சத்திய வாக்குமூலத்தின் பேரில் 1, 3, 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -**

என்னிடம் எத்தனை காசோலை பிரதிவாதியின் தந்தை கொடுத்திருந்தார் என்று கேட்டால் எதுவும் கொடுக்கவில்லை. பாண்டு மட்டும் 3 கொடுத்திருந்தார். சுமார் 20 ஆண்டுகள் ரவி எனக்கு பழக்கம். மேற்படி 20 ஆண்டுகளும் என்னிடம் ரவி கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தாரா என்றால் இல்லை, சமீபகாலமாகத்தான் என்னிடம் கொடுக்கல் வாங்கல் வைத்திருந்தார். இந்த வழக்கு புரோ நோட்டுக்கு முன்பாக என்னிடம் ரவி காசோலையோ, புரோ நோட்டோ எழுதிக் கொடுத்து கடன் ஏதும் பெற்றாரா என்றால் இல்லை. பொங்கலுக்கு பிறகு 20.1.2020ல் ரூ. 3 லட்சமும், 25.3.2020ல் ஒரு ரூ. 3 லட்சமும், 30.5.2020ல் ரூ. 3 லட்சமும் என்னிடம் ரவி வாங்கினார். மேற்படி 1ம் மாதம் வாங்கிய கடனுக்கு எவ்வளவு வட்டி கொடுத்தார் என்று கேட்டால் வட்டியே கொடுக்கவில்லை. 20.1.2020ல் வாங்கிய கடனுக்கு ரவி வட்டி கொடுக்காத போது நான் எப்படி 25.3.2020ல் மேலும் ரூ. 3 லட்சம் கடனாக கொடுத்தேன் என்று கேட்டால் நான் பணம் கட்டி விடுகிறேன் என்று சொன்னதில் பேரில் நான் மேலும் ரூ. 3 லட்சம் கொடுத்தேன். மேற்படி 20.1.2020 மற்றும் 25.3.2020 ஆகிய தேதிகளில் வாங்கிய கடனுக்கான வட்டியை ரவி எனக்கு கொடுத்து விட்டாரா என்றால் கொடுக்கவில்லை. வட்டி எவ்வளவு என்று கேட்டால் 12 சதவீதம் என்று ரவி சொன்னார். ஆனால் மாத வட்டி எவ்வளவு என்று ரவி சொல்லவில்லை. எவ்வளவு வட்டி என்று சொல்லாமலேயே 2ம் முறையும் கடன் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன், அதற்கும் 12 சதவீதம் என்று ரவி சொன்னார். 12 சதவீதம் என்பது மாதம் எவ்வளவு வட்டியை குறிக்கும் என்று எனக்கு இதுவரை தெரியாது. மேற்படி 20.01.2020 மற்றும் 25.03.2020ல் ரவி வட்டி கொடுக்காமல் இருந்த போதும் 30.5.2020 நான் ரூ. 3 லட்சம் கடன் கொடுத்தேன். மேற்சொன்ன 30.5.2020ல் வாங்கிய ரூ. 3 லட்சத்திற்கும் 12 சதவீதம் வட்டி என ரவி சொன்னார். மேற்சொன்ன 30.5.2020 கடனுக்கு பிறகு எப்போது வட்டி கொடுத்தார் என்று கேட்டால் வட்டியே கொடுக்கவில்லை. 30.5.2020க்கு பிறகு நான் ரவியிடம் சென்று மேற்படி தொகைக்கு வட்டியோ, அசலோ கேட்டேனா என்றால் கேட்டேன், அதற்கு அவர் தருகிறேன் என்று சொன்னால், ஆனால் தரவில்லை. வட்டி கூட தராமல் இருக்கிறாரே என்று ரவிக்கு நான் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் அனுப்பினேன். நான் 2வதோ, 3வதோ தான் படித்து உள்ளேன். நான் விவசாய தொழில் செய்கிறேன். மேலும் மாட்டு வண்டி ஓட்டியும் சம்பாதிக்கிறேன். நான் எங்கள் ஊரில் கந்து வட்டி, ராசி வட்டிக்கு பணம் கொடுத்து சம்பாதித்து வருகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகம் எனக்கு சுமார் 20 ஆண்டுகளாக தெரியும். குமார் எனக்கு சுமார் 15 - 20 வருடம் பழக்கம். எனது சொந்த ஊர் களர் கொட்டாய் கிராமம்.

களர் கொட்டாயில் இருந்து நொச்சிமலை சுமார் 10 கி.மீட்டர் தூரத்தில் இருக்கிறது. எனது ஊருக்கு கிழக்கே நொச்சிமலை உள்ளது. ரவி எவ்வளவு படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது. அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் போடுவாரா, தமிழில் கையொப்பம் போடுவாரா என்று கேட்டால் அவர் ஆங்கிலத்தில் கையொப்பம் போடுவார். ரவி ஆங்கிலத்தில் போடும் கையொப்பம் எனக்கு நன்றாக தெரியும். நான் ரவிக்கு என்ன Denomination-ல் பணம் கொடுத்தேன் என்று கேட்டால் 500 ரூபாய் நோட்டுகளாக கொடுத்தேன். நான் பணம் கொடுத்த காலகட்டத்தில் ரூ. 2000/- புழக்கத்தில் இருந்தது என்றால் எனக்கு தெரியவில்லை. (வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)

/உண்மை நகல்/

ஒப்பம்/- திரு. ப. மதுசூதனன்,
முதன்மை மாவட்ட நீதிபதி,
திருவண்ணாமலை.